
பக்கங்கள் 16+ 03

# மாலை முரசு

முழுக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 26 சனிக்கிழமை 10.01.2026 | அதிர்வு 164

**தெஹிவளை சம்பவம்:**

## “சூவா சமந்த”வின் சகாவே நேற்று சுட்டுப் படுகொலை



கொழும்பு, தெஹிவளை மெரின் டிரைவ் பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை 05

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை: 52 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழில்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 52 ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்று காலை நடைபெற்றது.

சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். முற்றவெளியில் அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவாலயத்தில் 02

# வடக்கின் மையத்தில் உள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம்


## இன்று இரவு கரையைக் கடக்கும் என எதிர்பார்ப்பு நாளை காலை வரை மழை தொடரவும் வாய்ப்பு

(எஸ்.நிதர்ஷன்)

வங்காள விரிகுடாவில் காணப்பட்ட ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தற்போது நன்க மைந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக வடக்கு மாகாணத்தின் மையத்தில் உள்ளது என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது இன்று முற்பகல் 11.40 மணியளவில் முல்லைத்தீவுக்கும் சுண்டிக்குளத்திற்கும் இடையில் சாளை ஊடாக நிலப்பகுதிக்குள் நுழைந்து தற்போது இரணைமடுக் குளப் பகுதியை மையம் கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

“இந்தச் சாளைப் பகுதி புவியியல் ரீதியாகவும் 05



# உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை: 52 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழில்!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நினைவேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சிறில், யாழ். மாநகர சபையின் மேயர் மதிவதனி விவேகானந்தராஜா உள்ளிட்ட உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஏற்பட்ட கலவரத்தில் 9 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

உலகளாவிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாமல் அப்போதைய சிறிமாவோ பண்டார நாயக்க தலைமையிலான அரசு, பொலிஸாரை அனுப்பி கலவரத்தை ஏற்படுத்தியது. இதன்போது 9 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

தமிழர்கள் மனதில் நீங்காத வடுவாக இந்தப் படுகொலைச் சம்பவம் பதியப்பட்டது என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.













# எனது கைதால் மக்கள் அதிர்ச்சி

## இப்படி பிணையில் வந்த டக்ளஸ் உருக்கம்

(எஸ்.நிதர்ஷன்)

தன்னைத் திடீரெனக் கைது செய்தமை தனது மக்களுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்று முன்னாள் அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவர், நேற்று பிணையில் விடுதலையான நிலையில் காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளார்.



அதில், தனது விடுதலைக்காக உழைத்த சிரேஷ்ட சட்டத்தரணி சாலிய பீரிஸ் மற்றும் தீர்ப்பளித்த நீதிவானுக்கு அவர் நன்றிகளைத் தெரிவித்தார்.

அத்துடன் பல காரணங்களுக்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் அவர் தனது நன்றியைப் பகிர்ந்து கொண்டார்.

2001 ஆம் ஆண்டு இராணுவத்தால் வழங்கப்பட்ட துப்பாக்கி ஒன்று, பாதாள உலகக் கும்பல் தலைவர் மாகந்துர மதூஷிடம் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

தற்போது நீதிமன்ற உத்தரவுப்படி அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# யாழில் பத்தரை இலட்சம் ரூபா பெறுமதியான போதை மாத்திரைகளுடன் இளைஞர் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் போதை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த இளைஞர் ஒருவர் 10 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஐந்து சந்தி பகுதியை அண்மித்த பகுதியில் பாடசாலை மாணவர்கள், இளைஞர்களுக்குப் போதை மாத்திரை விற்பனையில் இளைஞர் ஒருவர் ஈடுபட்டு வருகின்றார் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் போதை ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்படி இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த இளைஞரின் உடைமையில் இருந்து 3 ஆயிரம் போதை மாத்திரைகளைப் பொலிஸார் மீட்டுள்ளனர். அவற்றின் பெறுமதி சுமார் 10 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி இளைஞர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றார்.

அவரிடம் இருந்து போதை மாத்திரைகளைக் கொள்வனவு செய்த நபர்கள் தொடர்பிலும் விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.



# யாழில் சீற்றம் கொண்ட கடல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கடல் கொந்தளிப்பான நிலையில் காணப்படுகின்றது.

குறிப்பாக வடமராட்சிப் பகுதியில் கடல் மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படுகின்றது. மூர்க்கம் கடற்கரைப் பகுதியில் காணப்பட்ட சில கட்டுமானங்கள் கடல் அலையால் சேதமடைந்துள்ளன.







# வவுனியா - பேராறு வான் கதவுகள் திறப்பு! அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை!!

(கி.வசந்தன்)

வவுனியா, பேராறு அணையின் கீழ்ப் பகுதியில் வசிப்பவர்களை அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

வவுனியாவில் பெய்து வரும் மழை காரணமாக தாழ் நிலங்களில் வெள்ளம் தேங்கியுள்ளதுடன், குளங்களின் நீர் மட்டமும் அதிகரித்துள்ளது.

அந்தவகையில் பேராற்றுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளமையால் அதன் 3 வான்கதவுகளில் ஒரு வான் கதவு ஒரு அடி உயரத்துக்குத் திறக்கப்பட்டுள்ளது.

இதனால் நீர் செல்லும் பகுதியிலும், பேராறு அணையின் கீழ் பகுதியிலும் வசிப்பவர்கள் அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.



# கல்வி அமைச்சருக்கு எதிரான பிரேரணை: பொதுமக்களிடம் கையொப்பம் திரட்டல்!

கல்வி அமைச்சரான பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு எதிரான எதிர்க் கட்சிகளின் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குப் பொதுமக்களின் கையொப்பங்களைத் திரட்டும் நடவடிக்கை இன்று முதல் ஆரம்பமாகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்துள்ளார்.

புதிய கல்விச் சீர்திருத்தங்களில் உள்ள குறைபாடுகள் மற்றும் மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கல்வி அமைச்சர் பதவியில் இருந்து ஹரிணி விலக வேண்டும் என்றும், அது நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## "சூவா சமந்த"வின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தெஹிவளை மெரின் டிரைவ் பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு முன்பாக நேற்று இரவு 8.45 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர், ஹோட்டல் உரிமையாளர் மீது துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த ஹோட்டல் உரிமையாளர் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 57 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது.

சுட்டுக்கொலை செய்யப்பட்ட ஹோட்டல் உரிமையாளர் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவரும் போதைப் பொருள் கடத்தல்காரருமான "சூவா சமந்த" என்பவரின் நெருங்கிய சகா என்றும் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

பாதாள உலக கும்பலைச் சேர்ந்தவரும் போதைப்பொருள் கடத்தல்காரருமான "படோவிட்ட அசங்க" என்பவருக்கும் "சூவா சமந்த" என்பவருக்கும் இடையில் நீண்ட காலமாக நிலவிய தகராறு காரணமாக இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வடக்கின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலநிலையியல் ரீதியாகவும் கூர்ந்து அவதானிக்க வேண்டிய பகுதி. அண்மித்த காலங்களில் குறிப்பாக கடந்த 2000ஆம் ஆண்டு முதல் வங்காள விரிகுடாவில் உருவாகிய பல காற்றுச் சுழற்சிகள் (தாழமுக்கம்ஃ காற்றமுத்த தாழ்வு நிலைஃ ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு மண்டலம்ஃ புயல்) இந்தப் பகுதியினூடகவே வடக்கு மாகாணத்தினுள் பிரவேசித்துள்ளன.

இது இன்று மாலை அல்லது இரவு வலைப்பாட்டுக்கும் அந்தோனியார்புரத்துக்கும் இடையில் மீண்டும் கடற்பகுதிக்குள் செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் தற்போது வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் கிடைக்கும் மிதமான மழை நாளை காலை வரை தொடரும் வாய்ப்புள்ளது.

மிதமான மழை கிடைத்தாலும் தொடர்ச்சியாக மழை கிடைத்து வருகின்றது. இது ஒரு சில தாழ்நிலப் பகுதிகளில் நீர் தேங்க காரணமாக அமையக்கூடும்.

வடக்கு மாகாணத்தின் கரையோரப் பகுதிகள் தொடர்ந்தும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் மறு அறிவித்தல் வரை கடலுக்குச் செல்வதை தவிர்க்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தின் உள்நிலப் பகுதிகளில் காற்றின் வேகம் சற்று அதிகமாகக் காணப்படும். அதேவேளை இந்த நன்கமைந்த காற்றமுத்த தாழ்வு நிலை மீண்டும் கடற்பகுதிக்குள் செல்லும் போது கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்கு கரையோரங்களில் காற்றின் வேகம் மணிக்கு 40 - 50 கி.மீ. வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகின்றது."

- என்று பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா மேலும் கூறியுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சுடலை ஞானம்!

‘சுடலை ஞானம்’ என்பார்கள். காலம் கடந்து பிறக்கும் அறிவை அப்படிக் குறிப்பிடுவார்கள்.

‘குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடுதல்’ என்றும் ‘கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம்’ என்றும் கூட இந்த முட்டாள்தனத்தைச் சொல்லுவார்கள்.

அத்தகைய நிலைமை இப்போது காலம் கடந்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களுக்கு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் காலம் பிந்திய இந்த அறிவும் தெளிவும் அவர்களுக்கும் பயனற்றது. அவர்களது கட்சிக்கும் பயனற்றது. நாட்டுக்கும் பயனற்றது என்பதுதான் உண்மை.

நேரத்துடன் பல தரப்புக்களும் சுட்டிக்காட்டிய போது ஐக்கிய தேசியக் கட்சிக்கும், அதன் தலைமைப் பதவியை 32 ஆண்டுகள் கடந்தும் இப்போதும் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இது புரியவில்லை. இப்போது புரிந்தும், அது பயனற்றது என்பதுதான் நிலைமை.

“ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணைந்த பின்னர் கூட்டணியின் தலைமைப் பதவியை சஜித் பிரேமதாஸ ஏற்பதில் எமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை.” - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் நவீன் திஸாநாயக்க தெரிவித்திருக்கின்றார். அக்கட்சியின் பல தலைவர்கள் அண்மைக் காலத்தில் இதனைக் கூறிவிட்டனர்.

“ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைய வேண்டும். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தேர்தலில் இட ஒதுக்கீடுகளை மேற்கொள்ளலாம். முகாமைத்துவ குழுவொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். இரு தரப்பில் இருந்தும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும். இரு தரப்பினரும் ஏற்கக்கூடிய ஒருவர் பொதுச்செயலாளர் பதவிக்கு வரவேண்டும். கூட்டணியின் தலைமைப் பதவியை சஜித் பிரேமதாஸவுக்கு வழங்குவதில் பிரச்சினை கிடையாது. ஏனெனில் அவர்களுக்குதான் ஆதரவு தளம் அதிகமாக உள்ளது. இந்த உண்மையை ஏற்க வேண்டும். கூட்டணியின் தலைவராக சஜித்தும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக ரணில் விக்கிரமசிங்கவும் செயல்பட வேண்டும். கட்சி ஆதரவாளர்களின் மன நிலையை ரணில் விக்கிரமசிங்கவும் தற்போது புரிந்துகொண்டுள்ளார்.” - என்றெல்லாம் நவீன் திஸாநாயக்க இப்போது கூறுகிறார். இது பெரும்பாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் இன்றைய நிலைப்பாடு. இந்த யதார்த்தத்தை 2023 ஜனாதிபதி தேர்தல் சமயத்திலேயே புரிந்து கொண்டு, ஐக்கிய மக்கள் சக்தியோடு ஐக்கிய தேசியக் கட்சி இணங்கி வந்திருந்தால் - ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்குப் போட்டியாகத் தாம் களமிறங்காமல் ரணில் விக்கிரமசிங்க ஒதுங்கிக் கொண்டிருந்தால் - இன்று ஆட்சி அதிகாரம் தேசிய மக்கள் சக்தியின் கைகளுக்குப் போயிருக்காது. இப்படி எதிரணியில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் இருந்து கொண்டு அரசியல் ஒப்பாரி வைக்கும் நிலையும் வந்திருக்காது. வாய்ப்பைக் கோட்டை விட்டுவிட்டு, இப்படி நடுவீதிக்கு இரண்டு கட்சிகளுமே வந்ததற்கான பொறுப்பை முதலில் ஐக்கிய தேசியக் கட்சியும், அதன் ‘வாழ்நாள் தலைவரான’ ரணில் விக்கிரமசிங்கவும் அவருக்கு ஆலவட்டம் பிடிக்கும் அவரது கட்சியினரும்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்.




# இலங்கையின் சுதந்திர நாளை கரி நாளாக வலியுறுத்தி பேரணி!

## தாயக செயலணி அமைப்பினர் அனைவருக்கும் அழைப்பு

இலங்கையின் சுதந்திர நாளைக் கரி நாளாக வலியுறுத்தி வடக்கு – கிழக்கில் நடைபெறவுள்ள பேரணிக்கு வலுச் சேர்க்குமாறு தாயக செயலணி அமைப்பினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தாயக செலணி அமைப்பினர் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தனர்.

இந்த ஊடக சந்திப்பில் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்காவின் சுதந்திர தினம் தமிழர் தேசத்தின் கரிநாள். 04.02.1948 அன்று பிரித்தானிய காலணித்துவ ஆட்சியாளர்கள் ஆட்சி அதிகாரம் அனைத்தையும் சிங்கள பௌத்த பேரினவாதத் திடம் ஒப்படைத்த நாள். அந்த நாளில் இருந்து தமிழர் தாயகத்தில் தமிழ்த் தேசிய மக்களாகிய நாம் திட்டமிட்டு அடக்கப்பட்டு இனப்படுகொலைக்கு ஆளாகி ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

எனவே வருகின்ற 04.02.2026 அன்றைய சுதந்திர நாளை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் தலைமை ஏற்று இணைந்து நடத்தும் பேரணியில் பின்வரும் கோரிக்கைகளை வலியுறுத்துகின்றோம்.

1.வடக்குக் கிழக்கு தமிழ் மக்களின் பூர்வீகத் தாயகம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

2.தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீரிக்க வேண்டும்.

3.தமிழ் மக்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளை உறுதி செய்யும் வகையில் தமிழ் மக்களின் தேசிய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்.

4. தமிழ் இன அழிப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நிரந்தர பொறுப்புக் கூறலை உறுதி செய்ய வேண்டும்.

5.இலங்கை அரசு கையகப்படுத்தியுள்ள தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடங்களை விடுவிப்பதோடு, தமிழர் தாயகத்தை பல்வேறு வகையில் புத்த விகாரைகளை நிறுவியும் தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரங்களைப் பயன்படுத்தி கையகப்படுத்தும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்.

6.“பயங்கரவாதத் தடைச்சட்டம்” என்ற பெயரில் இன்றும் தொடரும் தமிழின அடக்கு முறைகளை நிறுத்தி, நீண்ட காலமாகச் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

7.கடந்த 77 ஆண்டுகளாகத் தொடரும் தமிழர் இன அழிப்பை நிறுத்தி ஓர் சர்வதேச நீதிப் பொறிமுறை மூலம் தமிழர்களின் வாழ்வுரிமையை உறுதி செய்யப்பட வேண்டும்.

8.வடக்குக் கிழக்கு இணைந்த தமிழர்களின் பூர்வீகத் தாயகம் என்பதையும் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை உடையவர்கள் என்பதையும் ஏற்றுக் கொண்டு, வட்டுக்கோட்டைத் தீர்மானம் மற்றும் திம்பு பேச்சு வார்த்தைகளின் அடிப்படையில் இறையாண்மை உள்ள தேச அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்.

மேற்கண்ட விடயங்களை வலியுறுத்தி “கரிநாள்” போராட்டம் 04.02.2026 புதன்கிழமை காலை 10 மணிக்கு தமிழர் தாயகத்தின் கிளிநொச்சி, மட்டக்களப்பு மாவட்டங்களில் நடைபெறும்.

இந்தப் போராட்டம் வெற்றியடைய, அனைத்து ஊடகங்களும், அமைப்புக்களும், குறிப்பாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்கள், மாணவர் அமைப்புக்கள், வடக்குக் கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கம், பட்டதாரிகள் சங்கம், சிவில் அமைப்புக்கள், மத அமைப்புக்கள், வர்த்தகர் சங்கங்கள், கடல் தொழிலாளர் சங்கங்கள், விவசாயக் கழகங்கள், போக்குவரத்துக் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள், ஊர்ச் சங்கங்கள், புத்திஜீவிகள் மற்றும் பொது மக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவரது பேராதரவையும் ஒத்துழைப்பையும் வேண்டுகின்றோம். – என்று தெரிவித்தனர்.

# வீட்டின் கூரையில் இருந்து 118 தோட்டாக்கள் மீட்பு!

## விசாரணை ஆரம்பம்

(பாறுக் ஷிஹான்)

வீட்டைப் பழுதுபார்க்கும் போது ஓடுகளுக்கு கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த 118 வகையான தோட்டாக்களை பாணமை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் பாணமை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புறநகர் பகுதியில் உள்ள வீடு ஒன்றைப் பழுது பார்க்கும் போது ஓடுகளின் கீழ் கீழ் மறைத்து வைக்கப்பட்டிருந்த 118 வகையான தோட்டாக்கள் (5.56ஒ 45அஅ) மீட்கப்பட்டுப் பாணமை பொலிஸ் நிலையத்தில் இன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வீட்டின் உரிமையாளர் தற்போது கொழும்பில் வசிப்பதோடு தனது சகோதரரிடம் குறித்த வீட்டைப் பழுதுபார்க்கும் பணியை ஒப்படைத்திருந்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜயசுந்தரவின் உத்தரவின் பேரில் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதமுல்ல, அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த பண்டாரவின் மேற்பார்வையில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.என்.பி டந்தநாராயண, பாணமை பொலிஸ் நிலைய



பொறுப்பதிகாரியின் மேற்பார்வையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றனர்



# யாழ். மாநகர சபை உத்தியோகத்தர்களை விமர்சிப்பது தொடர்பான அவதானிப்பை அறிக்கையாக முதல்வரிடம் கோருகிறார் உள்ளூராட்சி ஆணையாளர்!

(எஸ். நிதர்ஷன்)

யாழ். மாநகர சபை உத்தியோகத்தர்களை விமர்சிப்பது தொடர்பாக தங்கள் அவதானிப்புகளைக் கடிதம் மூலம் அறிவிக்குமாறு கோரி வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் யாழ். மாநகர சபை முதல்வருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நிதி நிர்வாகச் சுற்றறிக்கைக்கு முரணாக யாழ். மாநகர சபையில் எடுக்கப்படும் தீர்மானங்களும் அதனை நிறைவேற்றுவதற்காக உத்தியோகத்தர்களுக்கு அழுத்தம் கொடுக்கப்படுகிறது என்பது தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநருக்கு, யாழ்.மாநகர சபை பதவி நிலை உத்தியோகத்தர்களால் கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது.

அது தொடர்பில் விளக்கம் கோரும் வகையில் மாநகர முதல்வர் மதிவதனி விவேகானந்தராஜாவுக்கு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் குறித்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற மாநகர சபை அமர்வில் மாநகர சபை முதல்வர் குறித்த விடயத்தை வெளிப்படுத்தினார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நிதி நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் சுற்றறிக்கைகளை மீறி சபையால் தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. பின்னர் அவற்றை நிறைவேற்றுமாறு தொடர்ச்சியாக உறுப்பினர்களால் உத்தியோகத்தர்களுக்கு அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறது. பதவி நிலை உத்தியோகத்தர்கள் அனைவரும் சபை அமர்வுகளில் பங்கேற்க வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது. அவர்களை விதிமுறைகளுக்கு முரணாக சபை உறுப்பினர்கள் கேள்வி கேட்கின்றனர். விமர்சிக்கின்றனர். இதனால் உத்தியோகத்தர்கள் அசௌகரியங்களுக்கும் மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர். நிர்வாக விடயத்தில் உறுப்பினர்கள் தலையிடுவதால் நிர்வாகச் செயற்பாடுகளை வினைத்திறனாக முன்னெடுக்க முடியாது உள்ளது.– என்றுள்ளது.

மாநகர சபை உத்தியோகத்தர்கள் தொடர்பில் தரக்குறைவான வார்த்தை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு அவமானப்படுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பாகவும் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாநகரம் முதல்வர் கடிதத்தை வாசித்த பின்னர் மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர சபை பதவி நிலை உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் தொடர்பாக கடும் அதிருப்தி வெளியிட்டனர்.

சுற்றுநிருபங்களையும் நியம துணை விதிகளையும் வைத்து உத்தியோகத்தர்கள் எழுத்து மூலம் செயல்படும் போது நாங்களும் எதிர்வரும் காலங்களில் சுற்று நிருபங்களையும் நியம துணை விதிகளையும் வைத்து செயல்பட வேண்டி வரும் என்று மாநகர சபை உறுப்பினர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

மக்களுக்காகச் சேவை செய்ய வந்துள்ள உறுப்பினர்கள் மக்களது நலன் தொடர்பான பிரச்சினைகளையே செயற்படுத்த முன்வருகின்றனர். இந்த நிலையில் அரச உத்தியோகத்தர்கள் மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்க்க ஒத்துழைக்காது உறுப்பினர்களைக் குற்றஞ் சாட்டுவது எந்த விதத்தில் நியாயம் என்று உறுப்பினர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஒழுங்குக்கு வராத பிரச்சினைகள் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகளான உறுப்பினர்கள் கேள்வி எழுப்பும் போது, அது உத்தியோகத்தர்களுக்கு ஏன் மன உழைச்சலைத் தோற்றுவிக்க வேண்டும். மக்கள் வரியில் மக்களுக்குச் சேவை செய்யவே உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். உறுப்பினர்களும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களே என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். மாநகர சபை அமர்வுகளில் ஆணையாளர் இனி பங்கேற்கார்!

(எஸ்.நிதர்ஷன்)

எதிர்வரும் காலங்களில் யாழ். மாநகர சபை ஆணையாளர் மாநகர சபை அமர்வுகளில் பங்கேற்கமாட்டார் என்று மாநகர முதல்வருக்குக் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று மாநகர சபை முதல்வர் மதிவதனி விவேகானந்தராஜா தலைமையில் நடைபெற்றபோது குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

மாநகர சபை ஆணையாளர் தான் பங்கேற்காமை தொடர்பில் மாநகர சபை முதல்வருக்கு கடிதம் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்.

குறித்த கடிதத்தில், மாநகர சபை ஆணையாளர் மாநகர சபைக் கூட்டத்தில் பங்கேற்பது தொடர்பாக மாநகர சபை கட்டளைச் சட்டங்களிலோ மாநகர சபை நியம துணை விதிகளிலோ குறிப்பிடப்படவில்லை என்றும் எதிர்வரும் காலங்களில் பங்கேற்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

சபை அமர்வு குழு நிலைக் கூட்டங்களாக மாற்றப்படும் சந்தர்ப்பங்களில் மாநகர சபை ஆணையாளரின் ஆலோசனை தேவை எனக் கருதும் பட்சத்தில் அழைக்கப்பட்டால் பங்கேற்பேன் எனவும் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இது பழைய சட்டம். விளக்கம் இல்லாமலா இவ்வளவு காலமும் மாநகர சபை ஆணையாளர் மாநகர சபை அமர்வில் பங்கேற்றார். அல்லது ஏனைய மாநகர சபை ஆணையாளர்கள் பங்கேற்றது தவறு என கூறுகிறாரா என மாநகர சபை உறுப்பினர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.






# ஒட்டிசுட்டானில் யானை தாக்கி ஓட்டோ சாரதி படுகாயம்!

(பா.சதீசன்)

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டிசுட்டான் பகுதியில் நேற்று இரவு யானை தாக்கு தலுக்கு இலக்காகி ஒருவர் படுகாய மடைந்துள்ளார்.

முல்லைத்தீவில் இருந்து ஒட்டிசுட்டான் ஊடாக வவுனியா நோக்கி ஓட்டோவில் பயணித்துக் கொண்டிருந்த வேளை–யில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.


குறித்த ஓட்டோவில் இருவர் பயணித்திருந்த நிலையில், திடீரென வீதிக்குக் குறுக்காக வந்த யானை தாக்கியுள்ளது. இந்த தாக்குதலின் காரணமாக ஓட்டோ தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. ஓட்டோ பலத்த சேதமடைந்துள்ளது.

இதில் ஓட்டோ சாரதியான வவுனியா சிறிநகர் பகுதியைச் சேர்ந்த ம. பாஸ்கரன் என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த நபர் உடனடியாக முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளார்.

# முழுகொள்ளவையும் எட்டியது கிளிநொச்சி இரணைமடுக் குளம்



கிளிநொச்சி மாவட்டத்தின் மழையுடனான காலநிலை நிலவி வருகின்றது.

மாவட்டத்தின் மிகப்பெரிய குளமாகிய இரணைமடுக்குளம் அதன் முழு கொள்ளவையும் அடைந்துள்ளது.

மாவட்டத்தின் ஏனைய குளங்களான கனகாம்பிகைக்குளம், கல்மடுக்குளம் என்பன வான்பாய்கின்றன.

கிளிநொச்சியூடாக வட்டக்கச்சி செல்லும் வீதியில் விவசாயப் பண்ணைக்கு அருகில் பனை மரம் மின்சார வயரில் வீழ்ந்து காணப்படுகின்றது. அதனை அகற்றும் பணியில் மின்சார சபையினர் ஈடுபட்டுள்ளனர்.






# யாழ். நகரில் இடம்பெற்ற விபத்தில் ஆறுபேர் காயமடைந்து ஆஸ்பத்திரியில்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் ஆறு பேர் காயமடைந்துள்ளனர்.

கஸ்தூரியார் வீதி மற்றும் பெரிய கடை வீதி இணையும் சந்தியில் ஹயஸ் வாகனமும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளாகின.

ஹயஸ் வாகனத்தில் பயணித்த நான்கு பேரும் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு பேரும் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்தில் சிக்கிய ஒருவர் படுகாய மடைந்த நிலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பரு.நகர சபைக் கட்டடத் தொகுதியில் நடைபாதையை ஆக்கிரமித்து வியாபாரம்

## நடவடிக்கை எடுத்தார் நகர பிதா

பருத்தித்துறை நகர சபைக்குச்சொந்தமான நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் நடை பாதையை ஆக்கிரமித்து மேற்கொள்ளப்பட்டு வந்த வியாபார நடவடிக்கைகளை அகற்றுவதற்கு நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

குறித்த நடைமுறையை மீறும் வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரின் மத்தியில் அமைந்துள்ள நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள வியாபார நிலையங்களுக்கு முன்பாக ஒப்பந்தத்தின் பிரகாரம் வரையறுக்கப்பட்ட இடத்துக்கு மேலதிகமான இடத்தை ஆக்கிரமித்து பொருள்களைப் பரப்பி வியாபார நடவடிக்கை இடம்பெற்று வருகிறது.

இதனால் நடைபாதையை முற்றாகவே பயன்படுத்த முடியாத நிலையில் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். குறிப்பாக வெயில், மழை நேரங்களில் பிரதான வீதியூடாகவே பயணித்து கடைகளுக்கு செல்லும் நிலை காணப்படுகிறது.

இவ்வாறான நிலையில் வரையறுக்கப்பட்ட இடத்துக்குள் பொதுமக்கள் நடைபாதையை பயன்படுத்துவதற்கு இடையூறு இல்லாத வகையில் வியாபார நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு நவீன சந்தை கட்டடத் தொகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு குறித்த நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றதா என்பது குறித்து பருத்தித்துறை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் நேரில் பார்வையிட்டிருந்தார்.

இதன்போது மேற்குறித்த அறிவுறுத்தலை மீறிச் செயற்பட்டு வந்த சில வர்த்தக நிலையங்கள் கண்டறியப்பட்டன. ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டதற்கு அமைவாக செயற்படாவிடில் நடைபாதையை ஆக்கிரமித்து வைக்கப்பட்ட பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்த நகரசபை தரப்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று நகரபிதாவால் நேரடியாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

இதையடுத்து நேற்று வெள்ளிக்கிழமை காலை நகரசபை உத்தியோகத்தர்கள் நேரில் பார்வையிட்டுள்ளனர். திங்கட்கிழமை முதல் மேற்குறித்த நடைமுறை இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படும் என்று குறித்த வர்த்தக நிலையங்களுக்கு இறுதி அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# ஆங்கில பாடநூல் சர்ச்சை ஏற்படுத்திய அதிர்வலைகள்!

இலங்கையின் கல்வித் துறையில் எழுந்துள்ள தரம் 6 ஆங்கில பாடநூல் சர்ச்சை, ஒரு பாடநூலுக்குள் மட்டுமே சுருங்கிய பிரச்சினையாக இல்லாமல், அரசியல் நிர்வாகத்தின் செயல்திறனை கேள்விக்குள்ளாக்கும் விடயமாக மாறியுள்ளது.

புதிய கல்விச் சீர்திருத்தத்தை அல்லது புதிய நேர மாற்றத்தை அறிமுகப்படுத்துவதில் அரசு பாரியசவால்களைஎதிர்க்கட்சிகள்மற்றும்தொழிற் சங்கங்களிடமிருந்து எதிர்நோக்கிவரும் சமகாலத்தில், இந்த ஆங்கில பாடநூல் சர்ச்சை புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் கல்வித் துறையில் சமீபமாக வெடித்துள்ள தரம் 6 ஆங்கில பாடநூல் சர்ச்சை அரசியல் நிர்வாகத்தின் பொறுப்பற்ற தன்மையையும் பாடநூலாக்கக் குழுவின் பொறுப்பற்ற தன்மையையும் அதிகார மையப்படுத்தலையும் வெளிச்சத்துக்கு கொண்டு வந்துள்ளது.

எதிர்கால தலைமுறையின் மனங்களில் விதைக்கப்படும் கல்வி உள்ளடக்கம் கூட அரசியல் அலட்சியத்துக்கும் நிர்வாகக் குழப்பத்துக்கும் பலியாகிவிட்டதா என்ற கேள்வி இன்று மக்களிடையே எழுந்துள்ளது.

மொழித் திறனை மேம்படுத்தும் நோக்கில் தயாரிக்கப்பட்டதாகக் கூறப்படும் இந்த ஆங்கில பாடநூலில் இடம்பெற்றுள்ள சில வேண்டத்தகாத பக்கங்கள் அதாவது தன்னினச் சேர்க்கை தொடர்பான இணையத்தள சேர்க்கை என்பது மாணவர்களின் வயது நிலைக்கும், நாட்டின் பண்பாட்டு சமூக சூழலுக்கும் முற்றிலும் முரணானவையாக உள்ளன.

ஆனால் இவ்வாறான உள்ளடக்கங்கள் எவ்வாறு அரச அனுமதியைப் பெற்று வகுப்பறைகளுக்கு வரவிருந்தன என்பது தான் உண்மையான அரசியல் கேள்வி.

பாடநூல் தயாரிப்பில் கல்வியாளர்கள் புறக்கணிக்கப்பட்டு, நிர்வாக அதிகாரிகளின் தீர்மானங்களே மேலோங்கியதன் விளைவாகவே இந்தச் சர்ச்சை உருவாகியுள்ளதா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

மாணவர்களின் எதிர்காலத்தை உருவாக்க வேண்டிய கல்வித் துறை, அரசியல் அலட்சியம் மற்றும் நிர்வாகக் குழப்பங்களில் பலியாகிவருகிறதா என்ற சந்தேகம் இன்று சமூகத்தில் வலுப்பெற்று வருகிறது.

**கல்வியும் அரசியலும் பிரிக்க முடியாத உறவு**

கல்வி அமைச்சின் நேரடி கண்காணிப்பின் கீழ் தேசிய கல்வி நிறுவகத்தால் தயாரிக்கப்படும் பாடநூல்கள், அரசின் கல்விக் கொள்கையின் பிரதிபலிப்பாகும்.

இத்தகைய நிலையில், தரம் 6 மாணவர்களுக்கான ஆங்கில பாடநூலில் ஏற்பட்டுள்ள பிழைகள் மற்றும் பொருத்தமற்ற சேர்க்கைகள் (தன்னினச் சேர்க்கை இணையத்தள பக்கம்) கருத்துக்கள் அரசின் கல்வி நிர்வாகத் தோல்வியை வெளிப்படுத்துகின்றன என்ற விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இலங்கையில் அரசியல் மாற்றங்கள் ஏற்படும் ஒவ்வொரு முறையும், கல்விக் கொள்கைகளும், பாடத்திட்டங்களும் அவசரமாக மாற்றப்படுவது வழக்கமாகிவிட்டது. இதன் விளைவாக, மாணவர்களுக்கான பாடநூல்கள் ஆழமான ஆய்வின்றி, அவசர முடிவுகளின் அடிப்படையில் வெளியிடப்படுகின்றன என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

இதனைப்பொறுப்பேற்க வேண்டியவர்கள் யார்? இந்த சர்ச்சைக்குப் பிறகு, கல்வி அமைச்சு, பாடநூல் தயாரிப்பு குழு, அரசியல் தலைமைத்துவம் என யார் பொறுப்பேற்க வேண்டும் என்ற கேள்வியும் எழுகிறது.

ஆனால் வழக்கம்போல், பொறுப்பை ஏற்காமல், ஒருவர்மீது ஒருவர் குற்றம் சுமத்தும் அரசியல் கலாசாரம் தொடர்ந்தால், அதன் பாதிப்பு மாணவர்கள்மீதே விழும்.

**அரசியல் நோக்கங்களுக்கான கல்வி?**

சில அரசியல் விமர்சகர்கள், பாடநூல்கள் கல்விக்காக அல்ல, அரசியல் சிந்தனைகளை மென்மையாக புகுத்தும் கருவியாக மாறிவருகின்றன என குற்றம்சாட்டுகின்றனர்.

குறிப்பாக வரலாற்று பாடநூல்களில் தமிழர் வரலாறு பாரம்பரியம் அல்லது இந்து பாரம்பரியம் மறைக்கப்பட்டு பேரினவாத சிந்தனையில் மூழ்கி வருவதாக தமிழ் அரசியல் வாதிகள் அண்மைக் காலமாகக் குரல் கொடுத்து வருகின்றனர்.

அதேபோல் பாலியல் கல்வி பாடத்திட்டத்தில் சேர்க்கப்படும் என்ற அம்சமும் பரவலாக விமர்சிக்கப்பட்டது.

மாணவர்களின் வயதுக்கும் உளவளர்ச்சிக்கும் பொருந்தாத கருத்துக்கள் இடம்பெறுவது, இதன் விளைவாக இருக்கலாம் என அவர்கள் கூறுகின்றனர்.

கல்வி என்பது கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டிய ஒன்று. ஆனால் இன்று அது அரசியல் அதிகாரத்தின் கட்டுப்பாட்டுக்குள் சிக்கியுள்ளதாகக் காணப்படுகிறது.

எதிர்க்கட்சிகளின் விமர்சனம்

இந்த விடயத்தை எதிர்க்கட்சிகள் தீவிரமாக கையில் எடுத்துள்ளன. கல்வித் துறையில் நிலவும் இந்த குழப்பம், அரசின் முழுமையான தோல்வியை வெளிப்படுத்துகிறது என அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

சர்ச்சைக்குரிய பாடநூலை உடனடியாக வாபஸ் பெறவும், முழுமையான விசாரணை நடத்தவும் அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

அதற்கமைய குறித்த அத்தொகுதி தடை செய்யப்பட்டுள்ளது. சீல் வைக்கப்பட்டுள்ளது என்று சர்ச்சையில் சிக்கியிருக்கும் கல்விமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய பாராளுமன்றில் தெரிவித்தார்.

இருந்தும் எதிர்க்கட்சிகள் குறித்த பிரதமர் பதவி விலக வேண்டும் எனக் கூக்குரலிட்டதோடு நம்பிக்கையில்லா பிரேரணையில் கையெழுத்திட்டுள்ளனர்.

அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அப்படி பிரதமர் பதவி விலக தேவையில்லை என ஒரு போடு போட்டுள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் பிரதமர் பதவிக்கு வரத் துடிக்கும் சிலரின் நாடகமே பிரதமர் ஹரிணி பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை. அதனைக் கண்டிக்கிறோம் எனக் கூறியுள்ளார்.

அரச தரப்பும் எதிர்த்தரப்புக் கோரிக்கைகளை

தொடர்ச்சி▼

# ஆங்கில பாடநூல் சர்ச்சை ஏற்படுத்திய அதிர்வலைகள்!

தொடர்ச்சி▲

மறுத்துள்ளது. நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றில் சமர்ப்பித்தாலும் தோல்வி அடையலாம் என்று களநிலவரம் சொல்கிறது.

யார் எதைச் சொன்னாலும் புதிய கல்விச் சீர் திருத்தத்தை அமுல் படுத்துவது நிச்சயம் என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கா கூறி யுள்ளார்.

ஆங்கில பாடநூல் சர்ச்சை, கல்வியை அர சியல் லாப நஷ்டக் கணக்கில் பார்க்கும் மனப்பாங் கின் விளைவாகவே உருவானது என்றால் அது மிகுந்த கவலையளிக்கக்கூடிய விடயமாகும்.

ஒரு தலைமுறையின் எதிர்காலத்தை அரசி யல் சோதனைக் கூடமாக மாற்ற அனுமதிக்க முடியாது.

அரசியல் தலைமைகள் கல்வியை கட்சிக் கோட்டுகளுக்கு அப்பால் வைத்து, பொறுப்பு ணர்வுடன் செயல்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளன. இல்லையெனில், இந்த சர்ச்சை மறையும் போது கூட, அதன் பாதிப்பு மாணவர் களின் கல்வி வாழ்க்கையில் நீண்ட காலம் தொடரும்.

ஒரு நாட்டின் கல்வி முறை சீர்குலைந்தால், அதன் அரசியல் எதிர்காலமும் சீர்குலையும். ஆகவே, ஆங்கில பாடநூல் சர்ச்சை குறித்து விசா ரணை நடத்துவது மட்டுமல்ல, பாடநூல் தயா ரிப்பு முறையையே முழுமையாக சீரமைப்பதே இன்றைய அவசரம். இல்லையெனில், அரசியல் அலட்சியத்தின் விலையை எதிர்காலத் தலை முறைகள் தான் செலுத்த வேண்டிய நிலை உருவாகும்.



வித்தகர் விபுலமாமணி
வி.ரி.சகாதேவராஜா,
காரைதீவு நிருபர்.

# பெரியமுல்ல, ஏத்துக்கால பகுதியில் போதைப் பொருளுடன் ஒருவர் கைது!



(உடப்பு நிருபர் க.மகாதேவன்)

பெரியமுல்ல, ஏத்துக்கால ரயில் கடவைக்கு அருகில் சந்தேகத்துக்கு இடமாகக் காணப்பட்ட ஜீப் வண்டி ஒன்றைச் சோதனையிட்டபோது, அதில் பயணித்த நபர் போதைப் பொருள்க ளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை குற்றத்தடுப்புப் பணியில் ஈடுபட்டிருந்த நீர்கொழும்பு பிராந்திய குற்றத் தடுப்புப் பணியகத் தின் குழுவொன்றால் இந்த ஜீப் வண்டி சோதனையிடப்பட்டது.

இதன்போது சந்தேகநபரிடம் இருந்து 10 கிராம் கஞ்சா, 01 கிராம் கொக்கைன் மற்றும் 100 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர் நீர்கொழும்புப் பகுதி யைச் சேர்ந்த 32 வயதானவர் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட மேலதிக விசாரணை களின்போது, அவர் தங்கியிருந்த விடுதி அறையில் இருந்து 29 கிராம் 240 மில்லி கிராம் குஷ் போதைப் பொருளும், 02 கிராம் 230 மில்லி கிராம் அடையாளம் காணப்படாத போதைப் பொருளும் கண்டெடுக்கப்பட்டுள் ளன.

பின்னர், சந்தேகநபருக்குச் சொந் தமான மருந்தகம் ஒன்றைச் சோதனை யிட்டபோது அங்கிருந்து 1,000 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் நீர்கொழும்பு பிராந்திய குற்றத் தடுப்புப் பணியகம் மேலதிகவிசாரணைகளைமுன்னெடுத்து வருகின்றது.





# கிண்ணியா பகல் பராமரிப்பு நிலைய கட்டட பணியை பார்வையிட்ட அரச அதிபர்

திருகோணமலை மாவட்ட கிண்ணியா பிரதேச செயலக பிரிவில் உள்ள நடுவூற்று கிராமத்தில் திறக்கப்படவுள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான பகல் நேர பராமரிப்பு நிலையத்தை திருகோணமலை மாவட்ட அரசா அதிபர் டபிள்யு.ஜீ.எம்.ஹேமந்த குமார நேற்று நேரடி விஜயம் செய்து பார்வையிட்டார்.

குறித்த கட்டடப் பணி சமூக சேவைகள் திணைக்களம் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் தர்சனி கருணாரத்ன மற்றும் மேலதிகப் பணிப்பாளர் உள்ளிட்டவர்கள் இதனை பார்வையிட்டனர்.

இதன் மூலம் மாற்றுத் திறனாளிகளின் விசேட திறன்களை மேம்படுத்தவும் திறன்களை வளர்த்துக் கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் மாதமளவில் குறித்த கட்டடம் ஜனாதிபதியால் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது. கட்டடத்தின் அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்களை திருகோணமலை மாவட்ட அரசஅதிபர் மற்றும் சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் போன்றோர் மேற்பார்வை செய்தனர். இதன்போது குறித்த வளாகத்தில் பயன்தரும் மரங்களும் மாவட்ட செயலாளரால் நடப்பட்டது.

இதில் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சுதாகரன், கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.கனி, மாவட்டப் பொறியியலாளர், சமூக சேவைகள் திணைக்கள மாவட்ட இணைப்பாளர், சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கிண்ணியாவில் டெங்கு ஒழிப்பு!






(ஹஸ்பர் ஏ.எச்.)

வளமான நாடும் – அழகான வாழ்க்கையும் தூய்மையான நகரம் – ஆரோக்கியமான வாழ்க்கை என்னும் தொனிப் பொருளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை கிண்ணியாவில் இடம் பெற்றது.

இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கையானது பொது நிர்வாக மாகாண சபைகள் அமைச்சு மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் கிண்ணியா நகர சபை, கிண்ணியா பிரதேச செயலகம், கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் என்பன இணைந்து முன்னெடுத்தன.

இன்றைய தினம் மாஞ்சோலை கிராம சேவையாளர் பிரிவு மற்றும் கட்டையாறு கிராம சேவையாளர் பிரிவுகளில் டெங்கு பரிசோதனை நிகழ்வுகள் இடம் பெற்றன. டெங்கு குடம்பிகள் காணப்படும் இடங்கள் பரிசோதிக்கப்பட்டு சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

பேரிடருக்குப் பின்னரான சுகாதாரம் மற்றும் டெங்கு ஒழிப்பு மூன்று நாள் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் கிண்ணியா நகர சபை தவிசாளர் எம்.எம்.மஹ்தி, கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.கனி, கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.அஜீத் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.



# எங்கள் தேர்தல் உத்திகளை திருடவே கட்சியின் அலுவலகத்தில் சோதனை

## மம்தா பானர்ஜி குற்றச்சாட்டு

திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் உத்திகளை திருடும் நோக்கில் ஐ-பேக் நிறுவனத்தில் அமுலாக்கத் துறை சோதனை நடத்தியதாக அக்கட்சியின் தலைவரும், மேற்கு வங்க முதல்வருமான மம்தா பானர்ஜி குற்றம் சாட்டியுள்ளார்.

திரிணமூல் காங்கிரஸ் கட்சிக்கு தேர்தல் வியூகங்களை வகுத்தளிக்கும் ஐ-பேக் நிறுவனத்தின் கொல்கத்தா அலுவலகம், கொல்கத்தாவில் உள்ள அதன் இயக்குநர் வீடு உட்பட 10 இடங்களில் அமுலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தியதற்கு எதிர்ப்பு தெரிவித்து அக்கட்சியின் தலைவரும், மேற்கு வங்க முதல்வருமான மம்தா பானர்ஜி தலைமையில் கொல்கத்தாவில் மிகப் பெரிய பேரணி நடத்தப்பட்டது.

பேரணியின் முடிவில் உரையாற்றிய மம்தா பானர்ஜி,

“ஐ-பேக் நிறுவனத்துக்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத் துறை நடத்திய சோதனையின் நோக்கம், திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் தரவுகளையும் அதன் தேர்தல் உத்திகளையும் திருடும் நோக்கம் கொண்டது. இதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

பா.ஜ.கவின் அரசியல் கருவியாக அமுலாக்கத் துறை செயல்படுகிறது. அமலாக்கத் துறை சோதனை நடைபெற்ற இடத்துக்கு நான் கட்சியின் தலைவராகவே சென்றேன். மாநில முதல்வராக அல்ல. சட்டவிரோதமாக நான் எதையும் செய்யவில்லை.

அமுலாக்கத் துறையின் நடவடிக்கையைக் கண்டித்து டில்லியில் உள்ள அமித் ஷாவின் அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட திரிணமூல் காங்கிரஸ் (டி.எம்.சி.) கட்சியின் எம்பிக்கள் நடத்தப்பட்ட விதம், வெட்கக்கேடானது ஏற்றுக் கொள்ள முடியாதது.

ஜனநாயக முறைப்படி போராட்டத்தில் ஈடுபட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை, தெருக்களில் இழுத்துச் சென்றது டில்லி பொலிஸ் அல்ல; அது சீருடைக்குள் உள்ள ஆணவம். இந்த நாட்டின் ஜனநாயகம் பா.ஜ.கவின் தனிப்பட்ட சொத்து அல்ல.

அதிகாரத்தில் இருப்பவர்களின் வசதிக்காக செயல்படுவதல்ல ஜனநாயகம். பா.ஜ.க. தலைவர்கள் போராட்டம் நடத்தும்போது அவர்கள் சிவப்பு கம்பள வரவேற்பையும், சிறப்புச் சலுகைகளையும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், எதிர்க்கட்சி எம்.பிக்கள் போராட்டம் நடத்தினால் அவர்களை இழுத்துச் செல்கிறார்கள். இந்த இரட்டை நிலைப்பாடு பா.ஜ.கவின் ஜனநாயகம் எப்படிப்பட்டது என்பதை அம்பலப்படுத்துகிறது." என்று தெரிவித்துள்ளார்.

# ஜனநாயகன் பட விவகாரத்தில் தி.மு.க. - காங்கிரஸ் அரசியல்

## தமிழக பா.ஜ.க. குற்றச்சாட்டு

'ஜனநாயகன்' பட விவகாரத்தில் தி.மு.க. மற்றும் காங்கிரஸ் என்பன அரசியல் செய்கின்றன என தமிழக பா.ஜ.க. குற்றஞ்சாட்டியுள்ளது.

இதுதொடர்பில் பா.ஜ.க. மாநில செய்தித் தொடர்பாளர் ஏ.என்.எஸ். பிரசாத் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“ஜனநாயகன்' படத்துக்கு ‘யுஏ’ சான்றிதழ் வழங்குவதற் காக, சில குறிப்பிட்ட காட்சிகளை நீக்கும்படி படக்குழுவினருக்கு தணிக்கைத் துறைஅறிவுறுத்தி உள்ளது.

ஆனால், அந்த மாற்றங்களைச் செய்யபடக்குழுவினர் மறுத்து வருவதாகத் தெரிகிறது. இது தணிக்கைத் துறைக்கும் படக்குழுவுக்கும் இடையிலான நடைமுறைச் சிக்கலாகும்.

ஆனால், தேர்தலை மனதில் வைத்து, மக்களை திசை திருப்புவதற்காக தி.மு.க, காங்கிரஸ் உள்ளிட்ட கூட்டணி கட்சிகள் திட்டமிட்டு மத்திய அரசுக்கு எதிராக அவதூறு பரப்பி வருகின்றன. " என்று குறிப்பிட்டுள்ளார்.





# கரீபியன் கடலில் எரிபொருள் கப்பலை கைப்பற்றியுள்ள அமெரிக்கப் படைகள்

வெனிசுலாவின் எண்ணெய் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்த அமெரிக்கா தொடர்ந்து முயற்சித்து வரும்நிலையில், கரீபியன் கடலில் அமெரிக்கப் படைகள் மற்றொரு எரிபொருள் கப்பலைக் கைப்பற்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டுப் பாதுகாப்புத் துறையுடன் ஒருங்கிணைந்து கடற்படையினர், ஒலினா என்ற எண்ணெய் கப்பலை கைப்பற்றியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒலினா என்ற இந்தக் கப்பல் தடை செய்யப்பட்ட எண்ணெய்யை எடுத்துச் சென்றதாக சந்தேகிக்கப் பட்டே கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கப்பல் கைப்பற்றலின்போது ஹெலிக்கொப்டரிலிருந்து அந்தக் கப்பலுக்குள் அமெரிக்கத் துருப்புக்கள் இறங்குவதைக் காட்டும் காணொலி வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகிறது.

இதன்படி, அண்மைய வாரங்களில் அமெரிக்காவால் கைப்பற்றப்பட்ட வெனிசுலாவின் ஐந்தாவது கப்பல் இதுவாகும்.



# ரஷ்யா - சீனாவின் ஆதிக்கத்தைத் தடுப்பதற்காக கிரீன்லாந்து தீவை நாம் கையகப்படுத்தவேண்டும்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவிப்பு

ரஷ்யா மற்றும் சீனாவின் ஆதிக்கத்தைத் தடுப்பதற்காக, கிரீன்லாந்து தீவை அமெரிக்கா தனது முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

கிரீன்லாந்தை இலகுவான அல்லது கடினமான முறையிலாவது தாம் சொந்தமாக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிரீன்லாந்தை அமெரிக்கா சொந்தமாக்குவது ஏன் முக்கியம் என்று பிரபல ஆங்கில ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கு,

"மிகக் குறைந்த மக்கள் தொகை கொண்ட பிரதேசமாக இருந்தாலும், வட அமெரிக்காவிற்கும் ஆர்க்டிக்கிற்கும் இடையில் கிரீன்லாந்தின் இருப்பிடத்தில் ஏவுகணைத் தாக்குதல்கள் ஏற்பட்டால் முன்கூட்டியே எச்சரிக்கை அமைப்புகளுக்கும், பிராந்தியத்தில் கப்பல்களைக் கண்காணிப்பதற்கும் ஏற்றதாக அமைகிறது." என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

மேலும், கிரீன்லாந்து அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பிற்கு இன்றியமையாதது எனவும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், கிரீன்லாந்தின் வட மேற்கு முனையில், அமெரிக்கா ஏற் கனவே 100 இற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்களை நிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.





# ஈரானில் தொடரும் போராட்டங்கள்: பலியானோர் எண்ணிக்கை அதிகரிப்பு

ஈரானின் பொருளாதார நெருக்கடி மற்றும் ஆட்சிக்கு எதிரான பொது மக்களின் போராட்டங்கள் தீவிர மடைந்து வருகின்றன.

இதனால் இதுவரை உயிரிழந் தவர்களின் எண்ணிக்கை 45 ஐ தாண் டியுள்ளது.

31 மாகாணங்களில் 100 இற்கும் மேற்பட்ட நகரங்களில் மக்கள் இந்தப் போராட்டங்களில் பங்கேற்று வரு கின்றனர் என வெளிநாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. போராட்டங்களைக் கட்டுப்படுத்த நாடு முழுவதும் இணைய சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# போதைப் பொருளுக்கு எதிரான நடவடிக்கை மார்ச் மாதம் 31 முதல் தீவிரப்படுத்தப்படும்

## அமித் ஷா அறிவிப்பு




போதைப்பொருள் அச்சுறுத்தலை வேரறுக்கும் நோக்கில், மார்ச் 31 ஆம் திகதி முதல் மூன்று ஆண்டுக ளுக்கு நாடு தழுவிய அளவில் போதைப் பொருள்களுக்கு எதிரான பிரச்சாரத்துடன் அவற்றுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமித் ஷா அறிவித்துள்ளார்.

போதைப்பொருள் ஒழிப்பு ஒருங் கிணைப்பு மையத்தின் 9வது உயர் மட்டக் கூட்டம் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில், மத்திய அமைச்சகங்கள் மற்றும் துறைகள், மாநில அரசாங்கங்களின் பிரதிநிதி கள், போதைப்பொருள் ஒழிப்பு சட்ட அமலாக்க அமைப்புகளின் பிரதி நிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

போதைப்பொருள் பிரச்சினையைச் சமாளிக்க அனைத்துத் துறைகளும் மார்ச் 31 ஆம் திகதிக்குள் ஒரு செயல் திட்டத்தை தயாரிக்க வேண்டும், கண்காணிப்பு அமைப்புகளை நிறுவ வேண்டும், இதில் முழுமையாக கவ னம் செலுத்த வேண்டும் என்று வலி யுறுத்திய அமித் ஷா, ஒருங்கிணைந்த நடவடிக்கைகளின் மூலம் மட்டுமே இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என அறிவுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய அமித் ஷா,

“போதைப் பொருள்களுக்கு எதி ராக அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு நாடு முழுவதும் அனைத்து முனை களிலும் போராடி, போதைப் பொருள் கள் பிரச்சினைக்கு நாம் முடிவு காண வேண்டும். நாட்டின் இளைஞர் களை போதைப் பொருள்களிடமிருந்து பாதுகாக்க அனைத்து முயற்சிகளை யும் எடுக்க வேண்டும்.

தொடர்ச்சியான விழிப்புணர்வு மட்டுமே நம்மை பாதுகாப்பாக வைத் திருக்க உதவும். போதைப்பொருள்க ளுக்கு எதிரான இந்த போரில் போரா டும் திறன் கொண்ட ஒரு நிரந்தர அமைப்பை உருவாக்க அரசாங்கம் விரும்புகிறது. போதைப்பொருள்களை உற்பத்தி செய்பவர்கள், விற்பனை செய்பவர்களிடம் எந்த இரக்கமும் காட்டப்படக்கூடாது என்பதே அர சாங்கத்தின் தெளிவான கொள்கை. போதைப்பொருள்களால் பாதிக்கப் பட்டவர்களை மனிதாபிமானத்துடன் அணுகி முன்னேற வேண்டும்.

போதைப்பொருள்களுக்கு எதி ரான போராட்டத்தில் மத்திய அரசின் அனைத்து துறைகளும் 2029 வரை ஒரு செயல் திட்டத்தை தயாரித்து அதை செயல்படுத்துவதற்கான காலக்கெடுவுக்கு உட்பட்ட திட்டத்தை ஏற்படுத்த வேண்டும். அனைத்து டிஜிபிக்களும் அந்தந்த மாநிலங்களுக் கான செயல் திட்டத்தைத் தயாரித்து போதைப் பொருள்களை சரியான நேரத்தில் அழிப்பதற்கான உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.” என்று தெரிவித்தார்.


கனடா முரசு

சனிக்கிழமை | 10/01/2026

## 83 வயது மூதாட்டிக்கு 1 லட்சம் டொலர் பரிசு

கனடவில் கணவர் நினைவாக லாட்டரி எடுத்த டொராண்டோவைச் சேர்ந்த 83 வயது மூதாட்டி ஒருவர் 1 லட்சம் டொலர் பரிசு வென்றுள்ளார்.

எட்டோபிகோவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற 02▶




# டொராண்டோ மேற்கில் கத்தி குத்து தாக்குதல்கள்

## ஹாமில்டனில் சந்தேகநபர் கைது

டொராண்டோ நகரின் மேற்கு பகுதியில் இடம்பெற்ற இரண்டு கத்திக் குத்துத் தாக்குதல்கள் தொடர்பில் சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் வெளியிட்ட செய்திக் குறிப்பில், டொராண்டோவை சேர்ந்த 18 வயதுடைய நோவா கிறிஸ்டோபர் சாப்மன் வெள்ளிக்கிழமை ஹாமில்டனில் பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளார் என உறுதிப்படுத்தினர். 02▶





# கனடாவில் வேலை வாய்ப்பு உயர்வு; வேலையின்மை வீதமும் அதிகரிப்பு

2025 டிசம்பர் மாத வேலைவாய்ப்பு தரவுகளை கனடா வெளியிட்டுள்ளது.

அதன்படி, 8,200 புதிய வேலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆனால் அதே நேரத்தில், வேலையின்மை வீதம் 6.8 சதவீதமாக உயர்ந்துள்ளது.

வேலை வாய்ப்பு அதிகரித்தாலும், வேலை தேடுவோரின் எண்ணிக்கை அதிகரித்ததால் வேலையின்மை விகிதம் 0.3 வீதம் உயர்ந்துள்ளது.

முழுநேர வேலைகள் குறைந்துள் ளன, ஆனால் பகுதி நேர வேலைகள் அதிகரித்துள்ளன.

சேவைத் துறை மற்றும் கல்வி துறை வேலை வாய்ப்பில் முன்னிலை பெற்றுள்ளன.

இளைஞர்கள் மற்றும் பெண்கள் வேலை இழப்பில் அதிகமாக பாதிக் கப்பட்டுள்ளனர். வேலை வாய்ப்பு உயர்வு இருந்தா லும், பொருளாதார வளர்ச்சி மந்தமாக இருப்பதால் வேலையின்மை வீதம் அதிகரித்ததாக நிபுணர்கள் கூறு கின்றனர்.

வட்டி விகித உயர்வு மற்றும் வீட்டு சந்தை சவால்கள் காரணமாக நிறுவனங்கள் புதிய வேலை வாய்ப் புகளை உருவாக்குவதில் எச்சரிக் கையாக உள்ளன.

வேலை சந்தை நிலைமை, கனடா மத்திய வங்கி எடுக்கும் அடுத்த கட்ட முடிவுகளில் முக்கிய பங்கு வகிக்கும்.

கனடாவில் வேலை வாய்ப்பு உயர்ந் தாலும், வேலை இழப்பு வீதம் அதி கரித்திருப்பது பொருளாதார சவால் களை வெளிப்படுத்துகிறது. வேலை சந்தை நிலைமை, அடுத்த மாதங்க ளில் அரசாங்கம் மற்றும் மத்திய வங்கி எடுக்கும் நடவடிக்கைகளால் தீர்மானிக்கப்படும்.

## 83 வயது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெண்ணான மேரி ஸாமிட், ஓ.எல். ஜீ நிறுவனத்தின் லொத்தர் சீட்டின் மூலம் அதிர்ஸ்டம் வென்றுள்ளார். என் கணவர் கடந்த செப்டம்பர் மாதம் இறந்துவிட்டார்.

அந்த வேதனையிலிருந்து என் மனதை ஓரளவு திசைதிருப்ப இந்த லாட்டரி டிக்கெட்டுகள் உதவியதாகத் தெரிவித்துள்ளார்.

நேரத்தை நல்ல முறையில் செலவிட இது ஒரு வழியாக இருந்தது என்று அவர் கூறியுள்ளார்.

“என் கணவர் மறைந்த பிறகு, இது அவரிடமிருந்து வந்த ஆசீர்வாதம் போல உணரப்படுகிறது.

இந்த மகிழ்ச்சியை அவருடன் சேர்ந்து அனுபவிக்க முடியாதது மட்டும் வருத்தமாக உள்ளது,” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வென்ற பணத்தை குடும்பத்தின ருடன் பகிர்ந்து கொள்ளவும், தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடை வழங்கவும் திட்டமிட்டுள்ளதாகவும் மேரி குறிப்பிட்டுள்ளார்.

## டொராண்டோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த புதன்கிழமை பிற்பகலில் டஃபெரின் நிலையம் மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தில் நடந்த தாக்குதல் களில் இவர் சந்தேகநபராக முன்பே அடையாளம் காணப்பட்டிருந்தார். அன்றைய தினம் மாலை 4:30 மணிக்கு மற்றுமொரு கத்திக் குத்து சம்பவம் நடந்ததாக தகவல் கிடைத்ததையடுத்து அவசர சேவைகள் அப்பகுதிக்கு சென் றன.

விசாரணை அதிகாரிகள் கூறியதா வது, முதல் தாக்குதலில், டஃபெரின் மெட்ரோ நிலையத்தின் நிலத்தடியில் உள்ள மேசனின் பகுதியில் இருந்த பாதிக்கப்பட்டவரை சந்தேகநபர் பின் தொடர்ந்து கத்தியால் குத்தியுள்ளார்.

சில நிமிடங்களில், ப்ளூர் ஸ்ட்ரீட் டில் பாலின் அவென்யூ அருகே, மற் றொரு நபரையும் பின்தொடர்ந்து அவ ரின் காலில் கத்தியால் குத்தியுள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

கத்தி குத்துக்கு இலக்கண இருவ ரும் உயிருக்கு ஆபத்தில்லாத காயங்க ளுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். மேலும், அவர்கள் இருவருக்கும்சந்தேக நபருக்கும் அறி முகமில்லாதவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதல்களுக்கு என்ன காரணம் என்பது பற்றியும் பொலிஸார் இதுவரை எந்த தகவலும் வெளியிடவில்லை.



# கனடாவில் மீன்பிடிப்போருக்கு விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை

வார இறுதி விடுமுறையை முன் கூட்டியே தொடங்கும் வகையில், சிலர் லேக் சிம்கோவில் பனியில் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

இருப்பினும், ஏரியின் பல பகுதிகளில் பனியின் நிலைமை அபாயகரமாக இருப்பதால், மிகுந்த அவதானத்துடன் செயல்படுமாறு யார்க் பிராந்திய காவல்துறையின் கடல் பிரிவு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகளாக, பனி பாதுகாப்பானது என்று எங்களால் ஒருபோதும் உறுதி கூற முடியாது. ஒவ்வொருவரும் தாங்களே பனியின் உறுதியை சரிபார்க்க வேண்டும் என யோர்க் பிராந்திய பொலிஸ் தெரிவித்துள்ளது.

இந்த வாரம் லேக் சிம்கோவின் கிழக்குப் பகுதியில் உள்ள ஜார்ஜினாவின் ரோச்சஸ் பொயின்ட் பகுதியில், பொலிஸின்ஹெலிக்கொப்டரிலிருந்து எடுக்கப்பட்ட காணொளியில், சில இடங்களில் பனி இருப்பதும், சில இடங்களில் திறந்த நீர் காணப்படுவதும் பதிவாகியுள்ளது.

இத்தகைய சமனிலையற்ற பனி நிலைமை, இந்த காலகட்டத்தில் சாதாரணமானது என காவல்துறையும் பனி குடில் நடத்துனர்களும் கூறுகின்றனர்.

அடுத்த சில நாள்களில் வெப்பநிலை அதிகரிக்கும் என்பதால், அபாயம் மேலும் அதிகரிக்கக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே மீன்பிடியில் ஈடுபடுவோர் மிகுந்த அவதானத்துடன் எச்சரிக்கையாக மீன்பிடியில் ஈடுபட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

